12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

115. 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 4–1–2005 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)–ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

116. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

117. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

118. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தணிக்கை அறிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 34 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

119. 2000–2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தணிக்கை அறிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 34 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

120. 2001–2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தணிக்கை அறிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 34 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

121. 1997–1998 ஆம் ஆண்டிற்கான மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் மாவட்டவாரியான தணிக்கை அறிக்கை. [1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 39/1987) 18 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

[2005 ஏப்ரல் 13

122. 1998–1999 ஆம் ஆண்டிற்கான மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் மாவட்டவாரியான தணிக்கை அறிக்கை. [1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 39/1987) 18 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

123. 1999–2000 ஆம் ஆண்டிற்கான மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் மாவட்டவாரியான தணிக்கை அறிக்கை. [1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 39/1987) 18 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

250. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

251. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

252. 2003–2004 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு – ஆண்டு ஆய்வு அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

253. 2003–2004 ஆம் ஆண்டிற்கான "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

254. 31–3–2005 அன்று உள்ளவாறு 2001, 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்த விவர அறிக்கை. (தமிழ்)

255. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).